## மேனிலைத் தமிழ்ப்பாடத்திட்டம் – வரைவு

**முன்னுரை**

மனிதனை முழுமையாக்குவது கல்வி. ஒரு நாட்டின் வளத்திற்கும் நாட்டிற்கும் அடிப்படையாக அவைது, வளமான கல்விமுறையே. வளமான அறிவைப்பெற காட்சி, கேள்வி, உரையாடுதல், கல்வி, அனுபவம் ஆகிய ஐவகைத் திறனிலும் முதிர்ச்சி இருத்தல் வேண்டும்.

மனித இயக்கமானது உடல், உணர்வு, அறிவு என்னும் மூன்றாலானது. இம்மூன்றனையும் கட்டுப்படுத்துவது மூளையாக இருப்பினும், நல்லுணர்வு ஒன்றே மனித இயல்பை வெளிக்காட்டுவதாய் உள்ளது. நல்லுணர்வினை வளர்ப்பதில், மொழி சிறந்த கருவியாக உள்ளது. அம்மொழியைக் கற்பிக்கும் நுணுக்கமான கருவியாகப் பாடநூல் உள்ளது. அப்பாடநூல் உருவாக்கத்திற்கு அடிப்படைக் காரணியாக அமைவது பாடத்திட்டம். அப்பாடத்திட்டத்திற்குள் அமைக்கப்படும் மொழிக்கூறுகள், மாணவரின் சிந்திக்கும் திறனுக்கான திறவுகோலாக உள்ளன. மாறிவரும் காலச்சூழலில் மாணவரின் அறிவுப்பரப்பும், இயங்கும்முறையும், சிந்திக்கும்திறனும் பரந்துபட்டதாக உள்ளன. அவற்றிற்கேற்பப் புதிய முறைகள், உத்திகள், நுட்பங்கள் ஆகியவற்றில் மாற்றங்களை ஏற்படுத்தும் வண்ணம் பாடத்திட்டம் கட்டமைக்கப்படுகிறது.

அதனடிப்படையில் கடந்தகால அறிவையும், நிகழ்கால அறிவையும் எதிர்கால அறிவோடு இணைத்து, சமூகத்தில் சிறந்த வாழ்க்கையினை மேற்கொள்ளவும், மொழிப்பற்றின் வழியாகத் தமிழ், தமிழர், தமிழ்நாடு முதலிய உணர்வுகளை ஊட்டும் வகையிலும் மேனிலைப் பாடத்திட்டமானது உருவாக்கப்பட்டுள்ளது.

பாடத்திட்டமானது சமூகத்தேவை, சமூக அமைப்பு, மாணவர்களின் வளர்ச்சி ஆகியவற்றினை மனத்திற்கொண்டும், கற்றல் விளைவுகளுக்கான நோக்கங்களை அடிப்படையாகக்கொண்டும், திறன்களை உள்ளடக்கி மாணவர்களின் வளர்ச்சியை மையப்படுத்தியும், கற்றலுக்கு ஏதுவான தொழில்நுட்பங்களைப் பயன்படுத்த வாய்ப்பளிக்கும் வகையிலும் வடிவமைக்கப்பட்டுள்ளது.

**மேனிலைத் தமிழ்ப்பாடத்திட்ட நோக்கங்கள்**

- மொழியைப் பிழையின்றிப் பேசவும் எழுதவும் மட்டுமின்றி உணர்ந்து கையாளும் திறன் பெறுதல்
- தொன்மையும் தொழில்நுட்பமும் இணைந்த மொழியை இன்றைய நடைமுறைக்கேற்பப் பயன்படுத்துதல்
- அறிவியலும் தமிழும் இணைந்த மொழிக் கலைச்சொற்களைப் பயன்பாட்டில் பின்பற்றுதல்
- மனிதநேயம் வளர்க்கும் தன்மையை மொழிவழி உணர்தல்

- மொழியும் இலக்கியமும் சார்ந்த அறிவைப் பெறுதல்
- இயற்கை, சுற்றுச்சூழல் குறித்த விழிப்புணர்வை இலக்கியச் செய்திகளின்வழி பெறுதல்
- கலை, பண்பாட்டுச் செறிவைக் கொண்டுள்ள தமிழ்மொழியை உணர்ந்து கற்றல்
- உள, உடல் நலம் சார்ந்த கருத்துகளை மொழிவழி கற்றுக்கொள்ளல்
- தமிழ் இலக்கியக் கோட்பாடுகளைத் தெரிந்து மொழியைப் பயன்படுத்துதல்
- தமிழரின் அடையாளங்கள், தொன்மைகள் உணர்ந்து பெருமித உணர்வுடன் மொழியைக் கையாளுதல்

முதலிய நோக்கங்களை மையமிட்டு பின்வரும் கற்றல் விளைவுகள் மேனிலை பயிலும் மாணவர்களிடமிருந்து வெளிப்பட வேண்டும்.

**அடிப்படை மொழித்திறன்களின் வழி வெளிப்படும் கற்றல் விளைவுகள்**

- கேட்ட பகுதியின் உட்பொருள் அறிதல்
- கேட்கும் போதே இலக்கணப் பிழைகளை இனங்காணல்
- பேசுவோரின் நோக்கமறிதல்
- பேச்சைக் கேட்டு, அதன் உட்பொருளை வேறுபடுத்திக் காட்டுதல்
- அடைமொழிச் சொற்கள், கலைச் சொற்களின் பொருளறிந்து ஏற்றவாறு பயன்படுத்துதல்
- உவமை, உருவகம் ஆகியவற்றைத் தம் பேச்சிலும் எழுத்திலும் பயன்படுத்துதல்
- பிறமொழிச் சொல் கலவாது பேசுதல்
- கருத்து விளக்கமுறப் பேசுதல், சான்று காட்டி, மேற்கோள் காட்டி, உடன்பாட்டு, எதிர்மறையில் பேசுதல்
- வரவேற்புரை, பிரிவுரை, பாராட்டுரை, நன்றியுரை ஆற்றுதல்
- உரையாடுதல், கலந்துரையாடுதல்
- பொருளுணர்விற்கு ஏற்பப் பிரித்தும் சேர்த்தும் நிறுத்தக் குறியிட்டும் படித்தல்
- படிக்கும் பகுதியில் அமைந்த செறிவு, நயம் வாய்ந்த சொற்களை அடையாளம் காணல்
- பகுதிச் சுருக்கம் அறிய உதவும் சொற்கள், தொடர்களை அடையாளம் காணல்
- குறிப்பு திரட்டும் நோக்கில் படித்தல்

- பிறர் கேட்டுணரும் வகையில் படித்தல்
- பொருள் தடுமாற்றமின்றி ஏற்ற சொற்களைக் கொண்டு தொடர் அமைத்தல்
- செய்திகளை நிரல்படவும், தொடர்பு அறாமலும் நிகழ்ச்சிகள், கதைகள் எழுதுதல்
- சந்திப்பிழைகள் இன்றி எழுதுதல்
- விளம்பரத் தொடர்களை எழுதுதல்
- கட்டுரை எழுதுதல்
- படித்த, கேட்ட பகுதிகளுக்கான குறிப்பு எழுதுதல்
- படித்த, கேட்ட பகுதிகளை விரித்தும் சுருக்கியும் எழுதுதல்
- மொழிபெயர்த்தல்

இக்கற்றல் விளைவுகளைக் கைவரப்பெற்ற மாணவர், சிந்திக்கும் திறன், குழுவில் கலந்துரையாடும் திறன், செய்திகளைத் திரட்டும் திறன், கட்டுரை எழுதும் திறன், கவிதை எழுதும் திறன், உரையாடும் திறன், குறிப்பெடுக்கும் திறன், கருத்துகளைத் திரட்டியும் தொகுத்தும் விளக்கும் திறன், வளர்ந்து வரும் தொழில் நுட்பச் சூழலுக்கேற்ப மொழியினைப் பயன்படுத்தும் திறன், ஓய்வு நேரத்தைப் பயனுள்ள வகையில் பயன்படுத்தும் திறன், மொழியின்பால் பற்று, சமூகம், சுற்றுப்புறச்சூழல் சார்ந்த விழிப்புணர்வு, பொருள் புதைந்த எதிர்கால வாழ்வு, சமூகம் எதிர்கொள்ளும் சிக்கல்களை அறிந்து அவற்றிற்கேற்பச் செயலாற்றும் திறன், முடிவெடுக்கும் திறன் ஆகியவற்றைப் பெறவேண்டும். இவற்றைக் கருத்தில்கொண்டே பொருண்மைக் களங்களின் அடிப்படையில் பதினொன்று, பன்னிரண்டாம் வகுப்புகளுக்கான தமிழ்மொழிப் பாடத்திட்டம் (பொதுத்தமிழ்) வடிவமைக்கப்பட்டுள்ளது.

பின்வரும் களங்களுக்குள் மேனிலை முதலாண்டு மற்றும் இரண்டாமாண்டிற்கான பாடப்பகுதிகள் இணைத்து அளிக்கப்பட்டுள்ளன. பாடநூலில் இவை மாணவரின் வயது நிலைக்கேற்ப வளர்நிலையில் இடம்பெறும்.

## பொருண்மைக்களம் - மொழி

| பாடப்பொருள் (மாதிரி) | கற்றல்வெளிப்பாடுகள் |
|---|---|
| **செய்யுள்**<br>மொழி உணர்வை ஊட்டும் பாடல்கள் | தாய்மொழி உணர்வைப் பெறுவர்<br>கவிஞரின் மொழிப்பற்றைத் தாமும் உணர்ந்து பிறருக்கும் உணர்த்துவர் |

| | |
|---|---|
| சங்கப் பாடல்கள்<br>தற்காலக் கவிதைகள்<br><br>**உரைநடை**<br>உலக மொழிகளுள் தமிழின் சிறப்பு/<br>பிற மொழி அறிஞர்களின் தமழ்மொழி பற்றிய சிந்தனை/<br>இலக்கியம் பன்முகப் பார்வைகள்<br><br>**துணைப்பாடம்**<br>மொழிநடை உணர்த்தும் சிறுகதை ,புதினச்சுருக்கம் | பொருளுணர்ந்து சீர்பிரித்துப் படிக்கும் ஆற்றல் பெறுவர்<br>வாழ்வோடு ஒன்றியது தாய்மொழி என்னும் உணர்வைப் பெறுவர்<br>இலக்கியச் சுவையுணரும் திறன் பெறுவர்<br>மொழியுணர்வை ஊட்டும் பாடல்களைத் தொகுக்கும் திறன் பெறுவர்<br>பிற மொழியுடன் தமிழ்மொழியை ஒப்பிடும் திறனைப் பெறுவர்<br>தாய்மொழிப் பற்றும் தன்னம்பிக்கையும் பெறுவர்<br>நூல்களைப் படித்துச்சுட்டுரைக்கும் (விமர்சனம் ) திறன் பெறுவர்<br>மொழி நடையின் பல்வேறு வகைகளை அறிந்துகொள்வர்<br>மொழியின் சிறப்பு குறித்துக் கட்டுரை எழுதவும் உரையாற்றவும் திறன்பெறுவர்<br>மொழிவளம் பெருக்கும் ஆற்றலைச் சிறுகதை,புதினச் சுருக்கம் வழியாக வளர்த்துக் கொள்வர்<br>கதையாசிரியரின் மொழி நடை,வட்டார வழக்குகளைத் தெரிந்து கொள்வர்<br>தாமே முயன்று சிறுகதை, புதினம் ஆகியவற்றைத் தம் சொந்த மொழிநடையில் படைக்கும் திறன் பெறுவர்<br>சுருக்கி எழுதும் திறன் பெறுவர் |

## பொருண்மைக்களம் – நாடு/சமூகம்

| பாடப்பொருள் (மாதிரி) | கற்றல்வெளிப்பாடுகள் |
|---|---|
| **செய்யுள்**<br>நாட்டு வளம் உணர்த்தும் பாடல்கள்<br><br>**உரைநடை**<br>பழந்தமிழர் பற்றிய அயலவரின் குறிப்புகள்<br><br>**துணைப்பாடம்**<br>சமூகம் பற்றிய சிறுகதை அல்லது கட்டுரை | நாடு பெற்றிருக்க வேண்டிய சிறப்புகளை இலக்கியத்தின் வாயிலாக அறிந்து கொள்வர்<br>இலக்கிய இன்பத்தை உய்த்துணரும் ஆற்றலைப் பெறுவர்<br>வருணனையோடு எழுதும் திறன் பெறுவர்<br>இயற்கை, சுற்றுச்சூழல் பாதுகாப்பு குறித்த விழிப்புணர்வு பெறுவதுடன் அவை குறித்த விழிப்புணர்வுக் கட்டுரை எழுதுவர்<br>தமிழர்களின் மேன்மைகளை அயலவர்களின் குறிப்பின் மூலம் உணர்ந்து கொள்வர்<br>தமிழர்களின் சிறப்பினை விளக்கி உரைக்கும் ஆற்றல் பெறுவர்<br>மொழியின் உயரிய வளங்களைத் தெரிந்துகொண்டு பயன்படுத்தும் ஆற்றல் பெறுவர்<br>சிறுகதை கட்டுரை வழியாகச் சமூகம் பற்றிய சிந்தனைத்திறனைப் பெறுவர் |

| | |
|---|---|
| | சமூகத்தில் தம் பங்களிப்பை வெளிக்காட்டும் ஆற்றல் பெறுவர்<br>சமூகத்தை மேம்படுத்தும் கருத்தமைந்த சிறுகதைகளைத் தேடிப் படிக்கும் ஆர்வம் பெறுவர்<br>சமூக விழிப்புணர்வு சார்ந்த சிறுகதைகளைப் படைக்கும் திறன் பெறுவர்<br>சமூகச் சிக்கல்கள் குறித்துச் சொற்பொழிவாற்றும் திறன் பெறுவர் |

**பொருண்மைக்களம்** – அரசு/நிருவாகம்

| பாடப்பொருள் (மாதிரி) | கற்றல்வெளிப்பாடுகள் |
|---|---|
| **செய்யுள்**<br>ஆட்சிமுறை, நிருவாகம்<br>மேலாண்மை குறித்த பாடல்கள் | முன்னோரின் அரசாட்சி நெறிமுறைகளை உணர்ந்து கொள்வர்<br>சிறந்த அரசின் நிருவாகக் கூறுகளைப் பட்டியலிடுவர்<br>முடியாட்சி,குடியாட்சியின் நிறைகுறைகளைப் பகிர்ந்து கொள்ளும் திறன் பெறுவர் |
| **உரைநடை**<br>இலக்கியத்தில் மேலாண்மை | இலக்கியத்தின் மூலம் தமிழரின் நிருவாக மேலாண்மையைத் தெரிந்து கொள்வர்<br>அன்றும் இன்றுமுள்ள உள்ளாட்சி நிருவாக முறைகளை ஒப்பிடும் திறன் பெறுவர் |
| **துணைப்பாடம்**<br>அரசு, நிருவாகம் சார்ந்த நாடகம் | இலக்கியம் காட்டும் ஐம்பெருங்குழு ,எண்பேராயம், குடவோலை முறை ஆகியவற்றை அறிவர்<br>நிருவாக இயல்புகளைப் பகுத்தாராய்ந்து பேசும் திறன் பெறுவர்<br>கொடுக்கப்பட்டுள்ள கருத்தினை நாடகமாக்கும் ஆற்றல் பெறுவர்<br>நல்லரசு அமையக் காரணம் சிறந்த நடுநிலை திறனாய்வுக் கருத்துகளே என்பதைப் புரிந்து கொள்வர் |

**பொருண்மைக்களம்** – இயற்கை/ சுற்றுச்சூழல்

| பாடப்பொருள் (மாதிரி) | கற்றல்வெளிப்பாடுகள் |
|---|---|
| **செய்யுள்**<br>இயற்கை வளம்<br>மணிமேகலை<br>பட்டினப்பாலை<br>திருக்குறள்<br>நாலடியார் | இலக்கியம் காட்டும் இயற்கை வளங்களைத் தெரிந்து கொள்வர்<br>இலக்கியம் காட்டும் தாவரங்கள், விலங்குகள்,பறவைகள் ஆகியவற்றைப் பட்டியலிடவும் ,பாதுகாக்கவும் செய்வர்<br>இயற்கை இடர்ப்பாடுகளிலிருந்து பாதுகாத்துக் கொள்ளும் முறைகளைக் கற்றுக் கொள்வர்<br>தமிழரின் இயற்கை வேளாண்மைச் சிறப்பினை அறிந்து நடைமுறைப் படுத்துவர்<br>உடலைப் பாதுகாக்கும் இயற்கை உணவுமுறைகள் / பழக்கங்கள் பற்றிய அறிவைப் பெறுவர் |
| **உரைநடை** | தமிழரின் நீர் மேலாண்மையை இலக்கியத்தின் வழியாகத் தெரிந்துகொண்டு அதனைப் போற்றும் திறன் |

| | |
|---|---|
| இயற்கை வேளாண்மை / நீர் மேலாண்மை | பெறுவர்<br>தத்தமது சுற்றுச்சூழலைப் பேணும் ஆற்றல் பெறுவர்<br>நீரின் அவசியம் உணர்வர் ,சேமிக்கக் கற்றுக் கொள்வர்<br>நீர் மேலாண்மை குறித்துக் கட்டுரை எழுதவும் உரையாற்றவும் திறன்பெறுவர் |
| **துணைப்பாடம்**<br>சுற்றுச் சூழல் விழிப்புணர்வு குறித்த சிறுகதை | சுற்றுச் சூழல் தொடர்பான சிறுகதை எழுதும் திறன் பெறுவர்<br>கதைகளின் வழியாகச் சுற்றுச்சூழல் விழிப்புணர்வைப் பெறுவர் |

## **பொருண்மைக்களம்** – தொழில்/ வணிகம்

| பாடப்பொருள் (மாதிரி) | கற்றல்வெளிப்பாடுகள் |
|---|---|
| **செய்யுள்**<br>உழவு,நெசவு,வணிகம் ஆகியன குறித்த சங்க இலக்கியப் பாடல்கள் | சங்ககால வணிக முறைகள் பற்றிய அறிவை இலக்கியங்கள் வாயிலாகத் தெரிந்து கொள்வர்<br>பண்டைத் தமிழரின் தொழில், வணிகம் சார்ந்த குறிப்புகளைத் திரட்டித் தொகுப்பேடு உருவாக்குவர்<br>இலக்கியங்கள் வழியாகப் பண்டமாற்றுமுறை, நாணயங்கள்பற்றிய அறிவைப் பெறுவர்<br>உழவுத் தொழில், தமிழர்களோடு இரண்டறக் கலந்துள்ளதனை உணர்வர் |
| **உரைநடை**<br>தமிழரின் கடல் வணிகம் குறித்த கட்டுரை | தென்தமிழகத்தின் கடல் வணிகம் குறித்த செய்திகளை அயல்நாட்டினரின் குறிப்புகள் வழியாகத் தெரிந்து கொள்வர்<br>வணிகம். வாழ்வியலுடன் தொடர்பு கொண்டது என்பதை அறிவர்<br>கடல் வணிகத்தில் சிறந்தோரின் ஆளுமைகளைத் தொகுத்துக் கட்டுரை எழுதுவர் |
| **துணைப்பாடம்**<br>தொழில்வகை பற்றிய நேர்காணல் தொழில் சார்ந்த கலைச் சொற் தொகுப்பு | அனைத்துத் தொழில்களையும் மதிக்கும் பண்பைப் பெறுவர்<br>தாமே தொழில் செய்து வாழும் தன்னம்பிக்கை பெறுவர்<br>நேர்காணலுக்குரிய வினா நிரல் பட்டியல் தயாரிக்கும் ஆற்றல் பெறுவர்<br>ஊரில் தொழில் முனைவோரை நேர்காணல் செய்யும் திறன் பெறுவர்<br>தொழில் சார்ந்த கலைச்சொற்களைத் தொகுக்கும் திறன் பெறுவர் |

## பொருண்மைக்களம் – கலை / கல்வி

| பாடப்பொருள் (மாதிரி) | கற்றல்வெளிப்பாடுகள் |
|---|---|
| **செய்யுள்**<br>கல்வி / கலைகளின்<br>சிறப்புணர்த்தும் சங்கப் பாடல்கள்,<br>தற்காலக் கவிதைகள் | கல்வியின் மேன்மை குறித்து அறிந்து கொள்வதுடன், கல்லாத மக்களுக்கு விழிப்புணர்வும் ஊட்டுவர்<br>தங்களுக்குள் பொதிந்துள்ள ஆற்றலை வெளிக்கொணர்வர்<br>தாமே கவிதை எழுதும் திறன் பெறுவர்<br>எதிர்கால வாழ்க்கையைத் தீர்மானிக்கும் ஆற்றல் பெறுவர் |
| **உரைநடை**<br>சிற்பம் , இசை, ஓவியம், கட்டடம் ,<br>நடனம் ஆகிய கலைகள் குறித்த<br>கட்டுரை | கலைகளைக் கண்டு இரசிக்கவும் போற்றவும் கற்றுக்கொள்வர்<br>இசையின் வேர்கள் தமிழ் நூல்களில் பொதிந்துள்ளதைஇனம் காண்பர்<br>விருப்பமான கலைகளில் ஈடுபடுத்திக் கொள்ளத் தூண்டப்படுவர்<br>கலைநுட்பம் தெரிந்துகொண்டு தமிழர்தம் வாழ்வில் கண்ட,செய்த அரும்பணியை எண்ணி வியக்கும் திறன் பெறுவர் |
| **துணைப்பாடம்**<br>ஒளிப்படக்கலை<br>தமிழகப் புவிசார் குறியீடுகள் | கலைகளைப் பேணும் விழிப்புணர்வு ஆற்றலைப் பெறுவர்<br>அழிந்துவரும் நிலையிலுள்ள கலைகளை மீட்டெடுப்பதற்குரியவழிகளை ஆய்வர்<br>நிகழ்வுகளை நிரல்பட எழுதும் ஆற்றல் பெறுவர்<br>நிகழ்வுகளைப் படமாக்கும் திறன் பெறுவர்<br>கணினியின் மென்பொருள் வழி நகர்ப்படமாக்கும் கலையில் வல்லமை பெறுவர்<br>படமாக்கப்பட்ட காட்சிகளை மதிப்பிடும் திறன் பெறுவர் |

## **பொருண்மைக்களம்** – நாகரிகம் / பண்பாடு

| பாடப்பொருள் (மாதிரி) | கற்றல்வெளிப்பாடுகள் |
|---|---|
| **செய்யுள்**<br>நாட்டார் பாடல்கள்<br>பழந்தமிழர் உணவு முறை குறித்த சங்கப் பாடல்கள் /<br>தமிழர் நாகரிகம், பண்பாடு சார்ந்த பாடல்கள் | நாட்டார் பாடல்கள் வாயிலாகப் பழந்தமிழரின் பண்பாட்டுக் கூறுகளை அறிந்து கட்டுரை எழுதுவர்<br>தமிழர் நாகரிகத்தில் சிறந்து விளங்கினர் என்பது குறித்துச் சொற்பொழிவாற்றுவர்<br>பண்பாடுகளைத் தமதாக்கிக் கொண்டு வாழக் கற்றுக் கொள்வர்<br>மாந்தரின் பொதுப்பண்புகள் – தமிழருக்குரிய சிறப்புப் பண்புகள் ஆகியவற்றைப் பகுத்துக் காணும் ஆற்றல் பெறுவர்<br>தம் வீடு , சமூகத்திலுள்ள பண்பாட்டு நிகழ்வுகள் ஆகியவற்றில் பங்கேற்கும் திறன் பெறுவர்<br>பண்புகளோடு இணைதல் மனிதம் என்னும் உணர்வு பெறுவர்<br>தம் வாழிடம் குறித்த பண்பாட்டுச் செய்திகளைக் கட்டுரையாக்கும் திறன் பெறுவர்<br>நகரமயமாதலில் ஏற்படும் சிக்கல்களை உணர்ந்து தீர்வு காண முயல்வர்<br>நகர வாழ்வு குறித்த நாடகம் உருவாக்கி நடிக்கும் திறன் பெறுவர் |
| **உரைநடை**<br>பண்பாட்டு அசைவுகள்<br>பண்பாட்டு மானிடவியல்<br>தமிழர் சால்பு – குறித்த கட்டுரைகள் | |
| **துணைப்பாடம்**<br>புதுவை வளர்த்த தமிழ் - கட்டுரை<br>நகர வாழ்வு குறித்த சிறுகதை | |

**பொருண்மைக்களம்** - அறிவியல் / தொழில்நுட்பம்

| பாடப்பொருள் (மாதிரி) | கற்றல்வெளிப்பாடுகள் |
|---|---|
| **செய்யுள்**<br>தமிழர் அறிவியல் சிந்தனைகளை வெளிப்படுத்தும் பாடல்கள்<br>கணினிச் சிறப்பை வெளிக்காட்டும் பாடல்கள் | இலக்கியங்களில் வெளிப்படுத்தப்பட்டுள்ள அறிவியல் சிந்தனைகளை அறிந்து கொள்வர்<br>இன்றைய வாழ்வில் பயன்படுத்தப்படும் அறிவியலைத் தமிழர்களின் சிந்தனைகளோடு ஒப்பிடும் திறன் பெறுவர்<br>அறிவியல் தமிழ் தொடர்பான கவிதைகளைப் படைப்பர்<br>இலக்கியங்களில் உள்ள அறிவியல் சிந்தனைகளை விவரிப்பர் |
| **உரைநடை**<br>இலக்கியங்களில் அறிவியல் சிந்தனைகள்<br>அறிவியல் தமிழும் மொழிபெயர்ப்பும்<br>காலந்தோறும் புத்துணர்வு பெறும் தமிழ் மொழி | புதிய கண்டுபிடிப்புகளின் பெயர்களைத் தமிழில் மொழியாக்கம் செய்வர்<br>காலச்சூழலுக்கு ஏற்ப மொழி தன் வல்லமையை வளமாக்குகிறது என்பதில் பெருமிதம் கொள்வர்<br>பிறமொழிக் கட்டுரைகளைத் தாய்மொழியில் மொழிபெயர்க்கும் திறன் பெறுவர்<br>நீர் மேலாண்மை குறித்த நாடகத்தினைச் சுருக்கி எழுதும் திறன் பெறுவர்<br>உள்ளூர் நீர்வளம் குறித்த கட்டுரை எழுதும் திறன் அடைவர்<br>கடல்வழி வாணிகம் மேற்கொள்ளக் கையாண்ட முறைகளைத் தெரிந்துகொள்வர் |
| **துணைப்பாடம்**<br>தமிழர் கடல்வழிப் பயணம் (பயணக்கட்டுரை )<br>நீர் மேலாண்மை (நாடகம் )<br>பொருளதிகாரக் கோட்பாடுகள் | தமிழர் மேற்கொண்ட கடல்வழி வணிகம் சார்ந்த முறைகளைத் தொகுத்துத் தொகுப்பேடு உருவாக்குவர் |

**பொருண்மைக்களம்** - அறம்/தத்துவம்/சிந்தனை

<table>
<tr><th>பாடப்பொருள் (மாதிரி)</th><th>கற்றல்வெளிப்பாடுகள்</th></tr>
<tr><td>செய்யுள்<br>தமிழர் மெய்யியல்<br>தொடர்பானபாடல்கள்<br>அறக்கருத்துகள் அடங்கிய<br>செய்யுள்</td><td rowspan="2">காலத்திற்கேற்பமெய்யியல் வெளிப்படும் முறைகளைச் சிந்திப்பர்<br>பொதுவான அறங்கள் அனைத்து அறநூல்களிலும் கூறப்பட்டுள்ளதை ஒப்பிட்டுப் பார்க்கும் திறன் பெறுவர்<br>எக்காலத்திற்கும் பொருந்தும் அறங்களை வரிசைப்படுத்தத் தெரிந்து கொள்வர்<br>அறவழியில் நிற்க, பின்பற்ற வேண்டிய நெறிகளை வகுத்துக் கொள்வர்<br>தமிழரின் தத்துவக் கோட்பாடுகள், பிறமொழி தத்துவக் கோட்பாடுகளை விட மேன்மை பெற்றிருப்பதைப் பிரித்துக் காணும் ஆற்றல் பெறுவர்<br>அரச நீதி,சமூக நீதி, சமய நீதிகளில் காணப்படும் கருத்துகளைத் தொகுக்கும் திறன் பெறுவர்<br>அறக்கருத்துகளைத் தெரிந்துகொண்டு அதன்படி வாழும் திறன் பெறுவர்<br>சமூகச்சூழல் குறித்த விழிப்புணர்வுக் கவிதைகளை எழுதக் கற்றுக் கொள்வர்</td></tr>
<tr><td>உரைநடை<br>தமிழர் மெய்யியல் குறித்த<br>கட்டுரைகள்<br>துணைப்பாடம்<br>புதுக்கவிதைகளின் நோக்கமும்<br>போக்கும்</td></tr>
</table>

## **பொருண்மைக்களம்** - மனிதம்/ஆளுமை

| பாடப்பொருள் (மாதிரி) | **கற்றல்வெளிப்பாடுகள்** |
|---|---|
| **செய்யுள்** | தமிழரின் மனிதநேயப் பண்புகளை, இலக்கியங்கள் வாயிலாக அறிந்து போற்றுவர் |
| மனிதம் வளர்க்கும் | உயிர்களுக்குத்தீங்கிழைக்காமை என்னும் நெறியை வாழ்வில் பின்பற்றுவர் |
| செய்யுள்(தொடர் நிலை ) | தாம் வாழும் பகுதியில், மனிதநேயப் பாடல்கள் வடிவம் பெற்றதைத் தெரிந்து கொள்வர் |
| சங்க இலக்கியம் | இயற்கைச்சீற்றம் ஏற்படும்போது, தேவைப்படும் விழிப்புணர்வைப் பெற்றுக்கொள்வர் |
| நாட்டுப்புறப் பாடல் | மனிதநேயம் குறித்த பாடல்களைத் திரட்டித் தொகுப்பேடு உருவாக்குவர் |
| இயற்கைச் சீற்றப் பாடல் | தமிழர் வாழ்வு சிறக்க வாழ்நாள் முழுவதும் உழைத்தோர் பற்றித் தெரிந்து கொள்வர் |
| **உரைநடை** | தாம் நேசிக்கும் சிறந்த ஆளுமையாளர்களைப் பற்றி கட்டுரையாகத் தொகுக்கும் ஆற்றல் பெறுவர் |
| | பிறருக்காக வாழவேண்டும் என்னும் உயரிய எண்ணம் பெறுவர் |
| சிறந்த ஆளுமைகள் குறித்த தொகுப்புக் | சமூக வாழ்வில் தம்பங்கினை உணர்ந்து செயலாற்றுவர் |
| கட்டுரை | பிறர்நலம் சிறக்க வாழ்ந்தோரைப் பற்றிய செய்திகளைத் திரட்டிக் கட்டுரை எழுதுவர் |
| | மாற்றுத் திறன் படைத்தவர்களின் சாதனைகளைத் தொகுத்து வழங்குவர் |
| மனிதம் மலர பாடுபட்டோர் குறித்த உரை | உடலுறுப்பு தானம்செய்தல் பற்றிய விழிப்புணர்வு பெறுவர் |
| | மாற்றுத்திறனாளிகளை அவர்கள் நிலையிலிருந்து பார்க்கும் பண்பினைப் பெறுவர் |
| **துணைப்பாடம்** | |
| மாற்றுத் திறனாளிகள் தொடர்பான இரு | |
| கதைகள் | |

| | |
|---|---|
| உடலுறுப்பு தானம் பற்றிய நாடகம் | |

### **பொருண்மைக்களம்** - புதுமைகள்/ அழகியல்

| பாடப்பொருள் (மாதிரி) | கற்றல்வெளிப்பாடுகள் |
|---|---|
| **செய்யுள்**<br>இலக்கியக் கோட்பாடுகள்<br>அமைந்த கவிதைகள்<br>(புதுக் கவிதை ,சித்திரக் கவி ) | செய்யுள் வழியாக இலக்கிய வடிவமைப்பு உத்திகளைத் தெரிந்து கொள்வர்<br>தம் படைப்புகளைப் புதுமையான வடிவத்தில் வெளியிட முயல்வர்<br>பல்வேறு காலக்கட்டத்தில் இலக்கிய வடிவ உத்திகளைத் தொகுத்துத் தொகுப்பேடு உருவாக்குவர் |
| **உரைநடை**<br>தகவல் தொடர்பியல் ,<br>மொழிபெயர்ப்பியல்,<br>ஊடகத் தமிழ் | பிறமொழிச் சொற்கள், தொடர்கள் ஆகியவற்றை மொழியாக்கம் செய்யக் கற்றுக் கொள்வர்<br>பிறமொழிச் சொற்களுக்கான தமிழ்ச் சொற்களைக் கண்டறிவர்<br>தகவல் பரிமாற்றத் திறன் பெறுவர்<br>தகவல் பரிமாற்ற ஊடகங்கள், மொழி வளர்ச்சிக்கு ஆற்றும் பங்கினைக் கட்டுரையாக்குவர்<br>ஊடகங்கள் வெளிப்படுத்தும் மொழித்திறனை வேறுபடுத்திப் பார்க்கக் கற்றுக் கொள்வர் |
| **துணைப்பாடம்**<br>நவீனத்துவச் சிறுகதைகள்<br>நவீன இலக்கிய உத்திகள்<br>நாடக வகைகள் | ஊடகங்களில் பேசுவதற்கும் ,எழுதுவதற்கும் உரிய திறன்களைப் பெறுவர்<br>கால மாற்றத்திற்கு ஏற்பக் கதைகளின் கரு, மாற்றம் பெறுவதை உணர்வர்<br>குடும்பம், சூழ்நிலை ஆகியவற்றை வெளிக்காட்டும் நாடகங்கள் எழுதி நடிக்கும் திறன் பெறுவர்<br>நவீனத்துவச் சிறுகதைகளைத் தொகுத்துத் திறனாய்வு செய்யும் ஆற்றலைப் பெறுவர்<br>தாம் படித்த கதையின் மொழிநடை, வட்டார வழக்குச் சொற்கள் ஆகியவற்றைப் பிற சிறுகதையாசிரியர்களின் கதைகளோடு ஒப்பிட்டுப் பார்க்கும் திறன் பெறுவர் |

| வ.எண் | 11 ஆம் வகுப்பு | 12ஆம் வகுப்பு |
|---|---|---|
| 1. | மொழிமுதல், மொழிஇறுதி எழுத்துகள்<br>மயக்கங்கள் | சொல்வகைமை<br>*பெயர்ச்சொல், வினைமுற்று,பெயரெச்சம், வினையெச்சம், இடைச்சொல், உரிச்சொல்* -**இவற்றை வாக்கியத்தில் இனங்காணுதல்** |
| 2 | புணர்ச்சிவிதிகள்<br>( வல்லினம் மிகு மற்றும் மிகா இடங்கள்) | புணர்ச்சிவிதிகள் – உயிரீறு, மெய்யீறு |
| 3 | படைப்பாக்க உத்திகள்.<br><u>மரபுசார் உத்திகள் .</u><br>உவமம், உருவகம் உள்ளுறை,இறைச்சி,<br>மெய்ப்பாடு | படைப்பாக்கம்<br>கவிதை,கதை, |
| 4 | <u>நவீன உத்திகள்,</u><br>தொன்மம், படிமம், குறியீடு | கதை, நாடகம்,கட்டுரை |
| 5 | மரபிலக்கணம்-<br>வெண்பா எழுதும் பயிற்சி | ஆசிரியப்பா எழுதும் பயிற்சி |
| 6 | புதுக்கவிதைகள் எழுதும் பயிற்சி | உலகளாவிய கவிதை வடிவங்கள் – சில எடுத்துக்காட்டுகள் |
| 7 | ஊடகங்களில் தமிழ்<br>குறிப்பெடுத்தல், செய்தி உருவாக்கல், வாசகர் கடிதம், விளம்பரம், மொழிபெயர்ப்பு போன்றவற்றில் தமிழ்மொழியைப் பயன்படுத்துவதற்கான வழிவகைகள் | எழுத்துவகைகள்-<br>கடிதம்- வாழ்த்து அட்டை,அழைப்பிதழ், அறிக்கை, வினாநிரல், உருவாக்கல், பேச்சுவகை, மேடைப்பேச்சு, கருத்தாடல், சொல்லாடல், வரவேற்புரை, நேரடி வருணனை, நிகழ்வுரை, நிறைவுரை, தொகுப்புரை |
| 8 | கலைச்சொல்லாக்கம் | அடிப்படை அறிவியலில் உள்ள முக்கியமான சொல்லாக்கம் |

| | | |
|---|---|---|
| | ஆக்கப்பெயர் அறிமுகம் | |
| ૭ | சமூகஅறிவியல் - கலைச்சொற்கள்<br>வணிக அறிவியல் -  கலைச்சொற்கள் | தொழில்நுட்ப அறிவியலில் சொல்லாக்கம் (சமூக வலைதளம், வலைப்பூ, மின்னஞ்சல்,தமிழ்க்கல்வி தொடர்பான இணையத் தொடர்பிகள், தமிழ் ஒருங்கு குறியீட்டுமுறை விசைப்பலகை- தமிழ்99, தமிழ்ச்செயலிகள்) |
| 10. | மெய்ப்புத்திருத்தம்<br>மெய்ப்புதிருத்தக் குறியீடுகள் | கணினிக்குறியீடுகள் |